(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 4(2).]

# பாராளுமன்றத்தின்
# 4 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

**2026 ஜூலை 22, புதன்கிழமை வெளியிடப்பட்டது**

## திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 127/2026

கௌரவ சஜித் பிரேமதாச

கௌரவ திலித் ஜயவீர

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சாமர சம்பத் தசனாயக

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ கபீர் ஹஷீம்

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ இம்ரான் மகரூப்

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை

கௌரவ எம். ஏ. எம். தாஹிர்

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கௌரவ அமில பிரசாத்

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ பீ. ஆரியவங்ஷ

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே

கௌரவ எம்.எஸ் அப்துல் வாசித்

கௌரவ சதுர கலப்பத்தி

கௌரவ சுரங்க ரத்நாயக்க

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ ரோஹித அபேகுணவர்தன

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ ஜகத் விதான

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ டி.வீ. சானக

கௌரவ சானக மாதுகொட

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ ஹர்ஷன ராஜகருணா

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ சட்டத்தரணி அநுராத ஜயரத்ன,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் கௌரவ சட்டத்தரணி ஹர்ஷன நானாயக்கார அவர்களுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை,— 2026 ஜூலை மாதம் 05 மற்றும் 06 ஆம் திகதிகளில் நீர்கொழும்பு சிறைச்சாலையினுள் கைதிகளின் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதல்கள் காரணமாக சிறைச்சாலை அலுவலர்கள் மற்றும் கைதிகள் உட்பட 31 பேர் உயிரிழந்துள்ளதுடன், 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளமையினாலும்;

இது நாட்டின் அண்மைக்கால வரலாற்றில் சிறைச்சாலையொன்றினுள் இடம்பெற்ற மிக மோசமான மோதலாக அமைந்திருப்பதுடன், இதன் மூலம் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் கீழ் இயங்கும் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் மேற்பார்வை மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவம் குறித்து கடுமையான பிரச்சினைகள் எழுந்துள்ளமையினாலும்;

நீர்கொழும்பு சிறைச்சாலையின் ஆயுதங்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களைப் பாதுகாப்பாகப் பேணத் தவறியமை மற்றும் கைதிகளுக்கிடையிலான மோதல்களைத் தடுப்பதற்கான அத்தியாவசிய பூர்வாங்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்காமை போன்றன சிறைச்சாலை நிர்வாகத்தின் பாரதூரமான திறமையின்மையை வெளிப்படுத்துவதனாலும்;

2026 ஜூலை 05 ஆம் திகதி மோதல் ஆரம்பமான தினத்தில் அதனைத் தீர்ப்பதற்குக் கைகொடுக்கக்கூடிய வகையில், போதுமான மற்றும் தகுந்த நடவடிக்கைகளை விரைவாக எடுப்பதற்கு நீதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் தவறியமையின் காரணமாகவே, ஜூலை 06 ஆம் திகதியன்று மோதல்கள் தீவிரமடைந்தமையினாலும்;

முறையான முன்திட்டமிடல் எதுவுமின்றி, அரச அலுவலர்களான சிறைச்சாலை அலுவலர்களை மோதல் நடந்த இடத்திற்கு அனுப்பியதன் மூலம் அந்த அலுவலர்களின் உயிர்களுக்கு ஆபத்து விளைவிக்கப்பட்டமையினாலும்;

அரச சிறைச்சாலை முறைமையினுள் கைதிகள் மற்றும் அலுவலர்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்கான இறுதிப் பொறுப்பை நீதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரே வகிக்கின்றார் என்பதனாலும், அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதில் அவர் தோல்வியடைந்துள்ளார் என இந்த உயரிய சபை நம்புகின்றமையினாலும்;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2024 நவம்பர் மாதம் 25 ஆம் திகதிய 2412/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் நீதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு தொடர்பான கொள்கைகள், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தல் மற்றும் செயற்படுத்துதல், சிறைச்சாலை நிர்வாகம் மற்றும் மறுசீரமைப்பு, சிறைச்சாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் நெரிசல்களைக் குறைத்தல் ஆகிய பணிகளைப் பொறுப்புடன் நிறைவேற்றவில்லை என்பதனாலும்;

“வளமான நாடு அழகான வாழ்க்கை” கொள்கைப் பிரகடனத்தினுள் சிறைச்சாலைகள் தொடர்பாக முன்வைக்கப்பட்டிருந்த நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதற்கு அமைச்சர் தவறியதன் மூலம், மக்கள் வழங்கிய மக்கள் ஆணையை மீறியுள்ளமையினாலும்; மற்றும்

மேற்குறிப்பிட்ட காரணங்களுக்கு அமைவாக, நீதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள கடமைகளை பொறுப்புடன் நிறைவேற்றவில்லை என்பதனாலும்; அதேபோன்று, அவரது கடமைகள் குறித்து அமைச்சர் பொறுப்புக்கூறல் இன்றி செயற்படுகின்றார் என்பது முதல்தோற்ற நிலையில் தெளிவாகத் தெரிகின்றமையினாலும்;

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் கௌரவ சட்டத்தரணி ஹர்ஷன நானாயக்கார அவர்கள் தொடர்ந்தும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சராக தமது கடமைகளை உரியவாறு நிறைவேற்றுவதற்கான இயலுமை தொடர்பில் நம்பிக்கையை இழந்திருப்பதாக இப்பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றுமாக.